அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2023/2024

# தமிழ்

## ஆண்டு 8

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 15 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தமிழ்மறை எனப் போற்றப்படும் நூல்
   1. ஆத்திசூடி
   2. திருக்குறள்
   3. நல்வழி
   4. நாலடியார்

2. அவள் மதி போன்ற முகம் உடையவள். இதில் வந்துள்ள உவமானம்
   1. முகம்
   2. போன்ற
   3. மதி
   4. அழகு

3. தமிழ்மொழி தொன்மையானது. தொன்மை என்பதன் ஒத்தபொருட் சொல்
   1. புதுமை
   2. தண்மை
   3. பழைமை
   4. வளமை

4. நானிலங்களுள் புல்லாங்குழலைச் சிறப்பான இசைக்கருவியாகக் கொண்டது
   1. மருதம்
   2. குறிஞ்சி
   3. நெய்தல்
   4. முல்லை

5. கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுமுன் நடத்திப் பார்ப்பது
   1. அரங்கேற்றம்
   2. ஒத்திகை
   3. வெள்ளோட்டம்
   4. பட்டிமன்றம்

6. மாறன் உயிர்களிடத்தில் கழிவிரக்கம் உடையவன். இதில் கழி என்பது
   1. இடைச்சொல்
   2. உரிச்சொல்
   3. வினைச்சொல்
   4. பெயர்ச்சொல்

7. பதினோராம் நூற்றாண்டில் தென்கிழக்காசியா எங்கும் பரந்திருந்தது
   1. பல்லவர் ஆட்சி
   2. சேரர் ஆட்சி
   3. சோழர் ஆட்சி
   4. பாண்டியர் ஆட்சி

8. மாணவனுக்குத் தகுந்தது ஒழுக்கம். இதில் வந்துள்ள வேற்றுமை
   1. மூன்றாம் வேற்றுமை
   2. இரண்டாம் வேற்றுமை
   3. ஐந்தாம் வேற்றுமை
   4. நான்காம் வேற்றுமை

1 2 3 4

9. அன்னங்கள் தாமரை மலர்களில் உறங்கி எழுகின்றன. இதில் எழுகின்றன என்பது
   1. ஒன்றன்பால் நிகழ்காலம்
   2. பலர்பால் நிகழ்காலம்
   3. பலவின்பால் நிகழ்காலம்
   4. பலவின்பால் எதிர்காலம்

10. காட்டுமல்லிகை என்ற கவிதையை எழுதியவர்
    1. சின்னத்தம்பிப்புலவர்
    2. கல்லடிவேலுப்பிள்ளை
    3. து. உருத்திரமூர்த்தி
    4. சோமசுந்தரப்புலவர்

11. கருமை + குயில் என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. கருங்குயில்
    2. கரும்குயில்
    3. கருமைகுயில்
    4. கருவ்குயில்

12. பறவைகள் அழகாக நேசக்கவிதைகள் சொல்கின்றன. இதில் நேசம் என்பது
    1. அச்சம்
    2. அன்பு
    3. அழகு
    4. வியப்பு

13. தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழர் ஈழத்தில் குடியேற்றப்பட்ட பகுதி
    1. திருகோணமலை
    2. வன்னி
    3. மலையகம்
    4. யாழ்ப்பாணம்

14. இறந்தகாலம் காட்டும் இடைநிலைகள்
    1. கின்று, கிறு
    2. த், ட், ற், இன்
    3. ப், வ்
    4. த், ப், வ்

15. மாலதி பச்சை உடுத்தாள். இதில் பச்சை என்பது
    1. குணவாகுபெயர்
    2. காலவாகுபெயர்
    3. சினையாகுபெயர்
    4. தொழிலாகுபெயர்

16. அறுபதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. பொன்விழா
    2. பவளவிழா
    3. வெள்ளிவிழா
    4. வைரவிழா

1 2 3 4

17. வன்னியை 34 ஆண்டுகள் ஆட்சி செய்த மன்னன்
    1. பண்டாரவன்னியன்
    2. எல்லாளன்
    3. கயிலாயவன்னியன்
    4. சங்கிலியன்

18. ‘பறாளை விநாயகர் பள்ளு’ என்ற நூல் சின்னத்தம்பிப் புலவரால்
    1. இயற்றப்பட்டது
    2. இயற்றப்படுகிறது
    3. இயற்றப்படும்
    4. இயற்றினார்

19. தமிழிசையின் நுணுக்கங்களைக் கூறும் நூல்
    1. மணிமேகலை
    2. குண்டலகேசி
    3. சிலப்பதிகாரம்
    4. வளையாபதி

20. நரம்புக் கருவிகளுள் ஒன்று
    1. ஏழில்
    2. யாழ்
    3. தாளம்
    4. மேளம்

21. ஐரோப்பாவில் தமிழர் அதிகளவில் வாழும் நாடு
    1. பிரான்சு
    2. இத்தாலி
    3. யேர்மனி
    4. ஐக்கிய இராச்சியம்

22. சங்ககாலத்தைத் தொடர்ந்து வரும் காலம்
    1. பல்லவர் காலம்
    2. சோழர் காலம்
    3. சங்கமருவிய காலம்
    4. நாயக்கர் காலம்

23. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை
    1. முப்பது
    2. பதினெட்டு
    3. இருநூற்றுப் பதினேழு
    4. இருநூற்றுப் பதினாறு

24. வருகிறான் என்பதன் வினையடி
    1. வா
    2. வந்து
    3. வரு
    4. வந்த

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|

25. நண்பனுக்கு நண்பி போல உழவனுக்கு
    1. உழத்தி
    2. பாடினி
    3. உளவாளி
    4. உழவி

26. ஒருவர் தான் கற்றுத் தேர்ந்த கலையைப் பலர் முன்பாக முதன்முதலாக மேடையேற்றுவது
    1. ஒத்திகை
    2. வெள்ளோட்டம்
    3. அரங்கேற்றம்
    4. பட்டிமன்றம்

27. கடும் மழையால் ஊர் குளிரில் நடுங்கியது. இதில் வந்துள்ள ஆகுபெயர்
    1. குணவாகுபெயர்
    2. பொருளாகுபெயர்
    3. இடவாகுபெயர்
    4. தொழிலாகுபெயர்

28. பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழிலக்கியம்
    1. சிலப்பதிகாரம்
    2. திருக்குறள்
    3. மணிமேகலை
    4. தொல்காப்பியம்

29. சிறுநண்டு மணல்மீது படமொன்று …
    1. வாசிக்கும்
    2. கீறும்
    3. எழுதும்
    4. ஒட்டும்

30. தமிழர் அதிகமாக வாழும் தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்று
    1. நோர்வே
    2. பிரித்தானியா
    3. கனடா
    4. சிங்கப்பூர்

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சங்கமருவிய காலத்தில் இயற்றப்பட்ட நூல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

___

2. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன ஒடுக்குமுறை காரணமாகத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுள் இரண்டினை எழுதுக.

___

___

3. மகாகவி து. உருத்திரமூர்த்தி தனது கவிதை வாயிலாக எவற்றை எதிர்த்தார்?

___

___

4. தமிழிசை பற்றிய சான்றுகள் எவற்றில் உள்ளன?

___

___

5. அன்பில் உயர்ந்தவர் அன்னை. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

வேற்றுமை உருபு: ______________ பொருள்:______________

6. கோதை வில்போன்ற புருவம் உடையவள். இதில் வந்துள்ள உவமானம், உவமேயம் எனபவற்றை எழுதுக.

உவமானம்: ______________ உவமேயம்:______________

7. இன்கலைகள் குமுக வாழ்வியலுக்கும் வழிபாட்டுக்கும் துணைசெய்கின்றன. இத்தொடர்ச்சொல்லியத்தைத் தனிச்சொல்லியங்களாக எழுதுக.

___

___

(5X2=10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. கற்பனை

2. யாழ்நூல்

3. நுண்கலை

4. தொன்மை

5. துறைமுகம்

(5X2=10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காண வந்தேன்
நில்லும் எனக்கு இனி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

1. ஆறு எங்கெல்லாம் குதித்து வந்தது?

___________________________________________

2. சமவெளியில் ஆறு எவ்வாறு வந்தது?

___________________________________________

3. ஆறு யாரைக் காண வந்தது?

___________________________________________

4. ஆறு எவற்றைக் கடந்து வந்தது?

___________________________________________

5. பாடலில் வந்துள்ள இணைமொழி எது?

___________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

1. தம்பியும் நண்பர்களும் காற்பந்து விளையாடுகிறார்கள்.
2. நான் வாழும் நகரில் பல நாட்டு மக்கள் வாழ்கிறார்கள்.
3. இலைதுளிர் காலத்தில் அழகான வண்ணப்பூக்கள் மலர்ந்திருக்கும்.
4. நாம் எமது தாய்மொழி மீது பற்று உள்ளவர்களாக இருப்போம்.
5. தாயகத்தில் உள்ள தீவுகளில் பெரிய தீவு நெடுந்தீவு.

**வாழிடமொழி:**

1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. வையகத்தமிழர்
2. சங்கமருவிய காலம்
3. விடுமுறை

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - விடுமுறையின் நோக்கம்
   - விடுமுறை செல்லக் கூடிய இடங்கள்
   - விடுமுறையினால் கிடைக்கும் பயன்கள்
4. பள்ளிச்சுற்றுலா

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - நான் சென்ற பள்ளிச்சுற்றுலா
   - பள்ளிச்சுற்றுலாவுக்கான ஏற்பாடுகள்
   - பள்ளிச்சுற்றுலாவின் பயன்கள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

ஈழத்தில் தமிழை வளப்படுத்திய புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளார்கள். அவர்களுள் வேலுப்பிள்ளையும் ஒருவர். இவர் ஈழத்தின் வடபகுதியில் உள்ள வயாவிளான் என்னும் ஊரில் 1860ஆம் ஆண்டு பிறந்தார். அவரது வீட்டுக்கு அருகில் ஒரு பெரிய பாறாங்கல் இருந்தமையால், அக்கல் அவரது பெயருக்கு அடைமொழியாகி, கல்லடி வேலுப்பிள்ளை என எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவர் சிறு அகவையிலிருந்தே பாடல்களைப் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். அத்துடன் காளமேகப்புலவரைப் போலவே கல்லடி வேலுப்பிள்ளையும் போலிப் புலவர்களைக் கண்டால் நண்பர் என்றும் பாராது பெருஞ்சினங் கொள்வார். உடனுக்குடன் அஞ்சா நெஞ்சத்துடன் கவி பாடும் ஆற்றலைக் கொண்டிருந்ததால், அவரை எல்லோரும் ஆசுகவி என அழைத்தனர். தமிழ்மொழியில் உரைநடையை வளப்படுத்திய சான்றோர்களுள் இவரும் அடங்குவார். ‘சுதேசநாட்டியம்’ என்னும் செய்தித்தாளில் அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்து இதைத் தெளிவாக அறியமுடிகிறது. கல்லடி வேலுப்பிள்ளை எழுதிய ‘யாழ்ப்பாண வைபவ கௌமுதி’ என்னும் நூலானது யாழ்ப்பாணத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கும் ஒப்பற்ற நூலாக விளங்குகிறது.

1. கல்லடி வேலுப்பிள்ளை பிறந்த ஊர் எது?

______________________________

______________________________

2. அவர் ஏன் ஆசுகவி என அழைக்கப்பட்டார்?

______________________________

______________________________

3. கல்லடி வேலுப்பிள்ளை எனப் பெயர்வரக் காரணம் என்ன?

______________________________

______________________________

4. அவர் கட்டுரைகள் எழுதிய செய்தித்தாள் எது?

______________________________

______________________________

5. யாழ்ப்பாணத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் கூறும் நூல் எது?

______________________________

______________________________

(5×2=10 புள்ளிகள்)

**2. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி, பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. வாழ்க்கையில் ஒற்றுமையாக இருந்தால் எவராலும் எங்களை வெல்ல முடியாது.
2. அவர் பிள்ளைகளிடம் சுள்ளிக்கட்டு ஒன்றைக் கொடுத்து, ஒவ்வொருவராக முறிக்கும்படி கூறினார். அதை நால்வராலும் முறிக்க முடியவில்லை.
3. ஒரு வணிகன் தனது நான்கு பிள்ளைகளும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என விரும்பினார்.
4. சுள்ளிக்கட்டைப் பிரித்து, ஒவ்வொரு சுள்ளியாக நால்வருக்கும் கொடுத்தபோது அவற்றை இலகுவாக முறித்தனர்.
5. சுள்ளிகள் சேர்ந்திருந்தபோது முறிக்க முடியவில்லை. ஆனால், தனித்தனியாக இருந்தபோது முறிக்க முடிந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |